30th March 1961]

DEPUTY SPEAKER : It is not in order for the hon. Members to say ' Sir, Sir.' Only those hon. Members who catch the eye of the Chair will be called to put supplementaries.

Houses for scavengers

*1181 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் பொதுமராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபாலிட்டிகளில் வேலை செய்யும் நகர சுத்தித் தொழிலாளர் களுக்கு வீடு கட்டும் திட்டம் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டுமென்று மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஆலோசனை கூறியுள்ளார்களா ?

THE HON. SRI P. KAKKAN : Yes, sir.

SRI T. SAMPATH : Will the scheme be included in all municipalities ?

THE HON. SRI P. KAKKAN : I think so, sir.

SRI S. M. ANNAMALAI : மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக வேண்டி எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எந்தெந்த யிடங்களில் கட்டப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : இதற்காக மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 30 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஸ்தலஸ்தாபனங்களுக்கு கொடுக்க இது ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்கு கட்டுவது என்பது குறித்து, ஐ.எல்.பி.யிடம் கேட்டிருக்கிறோம். அவர்கள் ரிபோர்ட் சமர்ப்பித்தவுடன் முடிவு செய்யப்படும்.

SRI P. G. MANICKAM : மூன்றுவது திட்டத்தில் ரூபாய் 30 லட்சம் ஒதுக்கியிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தத் தொகை முனிசிபாலிட்டிகளில் வேலை செய்யும் நகரசுத்திதொழிலாளர் களுக்கு மட்டும்தான் செலவழிக்கப்படுமா? அல்லது மேஜர் பஞ்சாயத்து போர்ட் களில் உள்ள நகரசுத்தி தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI P. KAKKAN : முனிசிபாலிட்டி, மேஜர் பஞ்சாயத்து எல்லாம் சேர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன். பெரும் பகுதி முனிசி பாலிட்டியிலுள்ள நகரசுத்தி தொழிலாளர்கள் கஷ்டப்படுவதால் அவர்கள் பிரச்னை கவனிக்கப்படும்.

SRI N. MARUDACHALAM : நகரசுத்தி தொழிலாளர்களுக்கு எந்தெந்த நகரங்களில் எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்?

THE HON. SRI P. KAKKAN : மத்திய சர்க்காரிலிருந்து 50 சத விகிதம் கொடுக்கிறார்கள். 50 சத விகிதம் ஸ்தலஸ்தாபனங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். எந்த எந்த ஸ்தலஸ்தாபனங்கள் 50 சத விகிதம் கொடுக்கத் தயாராயிருக்கிறதோ அப்பொழுது ஐ.எல்.பி. எங்கெங்கு தேவையிருக்கிறதோ அங்கு கொடுக்க ஏற்பாடு செய்வார்கள்.

SRI M. KALYANASUNDARAM : இந்தமாதிரி கட்டப்படும் வீடுகளில் வாடகை அதிகமாக இருக்கிற காரணத்தினால் நகரசுத்தி தொழிலாளர்கள் அதை உபயோகப்படுத்த முடியாமல் அவை மற்றவர்களுக்கு கொடுக்கப் பட்டு வருகிறதென்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத்தெரியுமா ? ஆகவே, வாடகையைக் குறைத்து நகரசுத்தித் தொழிலாளர்களுக்குக் கொடுக்க உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இது ஒரு வாடகை பிரச்னையல்ல. ரூபாய் 2½-க்குக் கொடுக்க திட்டமிட்டிருக்கிறார்கள். நகரசுத்தி தொழிலாளர் களிடம் வாடகை வாங்குவதா இல்லையா என்பது முடிவுசெய்யவில்லை. அவர்கள் எவ்வளவு காலம் நகரசபையில் வேலை செய்கிறார்களோ அதுவரை அங்கிருக்கலாம். பின், மற்றவர்கள் வந்தால் அவர்களுக்கும் கொடுக்கப்படும்.

Sri T. SAMPATH : நகராட்சிகள் 50 சத விகிதம் தொகை கொடுக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். சில நகராட்சிகளுக்கு பண வருவாய் குறைவின் காரணமாக இத்தொகை கொடுக்க முடியாத நிலையிருக்கிறது. ஆகவே சர்க்கார் இந்த 50 சத விகிதம் பணத்திற்கு அவர்களுக்கு கடன் உதவி செய்வார்களா ?

The Hon. Sri P. KAKKAN : அப்படி இந்தத் திட்டத்தில் இல்லை. மத்திய சர்க்கார் பாதி கொடுக்கிறார்கள். பாதி ஸ்தல ஸ்தாபனங்கள் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். பணம் இல்லாவிட்டால் எப்பொழுது பணம் வருகிறதா அப்பொழுது இதற்கு முன் வந்தால் கவனிக்கலாம்.

Dam across Koraiyar

*1182 *Q.*—Sri V. ARUNACHALA THEVAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to construct a dam across Koraiyar, Kulathur taluk ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Yes, sir.

Power supply to Guruvappanaickanur

***1183** *Q.*—**Sri M. A. B. ARUMUGHASAMI** : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தாலூகா கோடல்வாவி கிராமத்தைச் சேர்ந்த, குருவப்பநாயக்கனூர் பொதுஜனங்கள் 12—3—1960-ம் தேதியில் கனம் மின்சார அமைச்சர் அவர்களிடம் அவ்வூர் பொது கிணற்றிலிருந்து நீர் இறைக்க மின்சார மோட்டாருக்கு லைசென்சு கொடுத்ததைப்பற்றி ஏதேனும் புகார் மனு கொடுத்தார்களா ?

(இ) அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes, Sir. A petition was received on 9th March 1960.

(*b*) The matter is being examined in consultation with the Madras State Electricity Board. Certain further particulars have been called for from the Board and they are awaited.

Sri M. A. B. ARUMUGHASAMI : இந்த மின்சார இணைப்பு சர்க்கார் விடுமுறை நாள் அன்று, போலீஸ் பந்தோபஸ்தோடு கொடுக்கப்பட்டது உண்மையா ? அவ்வளவு அவசரமாக போலீஸ் பந்தோபஸ்தோடு கொடுக்க வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது ?

The Hon. Sri V. RAMAIAH : இந்தக் கேள்வியில் எழுப்பப் பட்டிருக்கக்கூடிய பிரச்னை ஒரு பொதுவான பிரச்னையல்ல. இரு சாராருக்குள்ள ஒரு தகராறு. ஆகவே இதை நல்லவிதமாக நுணுக்கமாகப் பார்த்த அதிகாரிகள் இதை கோர்ட்டுக்கு சென்று ஒரு முடிவு செய்து கொள்ளவேண்டுமென்று தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்த அதிகாரிகள் எந்தவிதமான ஒரு திட்டவட்டமான முடிவிற்கும் வரவில்லை. அவர்கள் பரிசீலனை செய்து கொடுத்திருக்கும் முடிவுகளைப் பார்க்கும்போது, இந்த மின்சார இணைப்பு கொடுத்தது நியாயம் என்ற நிலையைத்தான் ஒப்புக்கொள்ளக்கூடிய அந்த ரூபத்தில் தான் பரிசீலனை செய்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பரிசீலனை செய்து இறுதியாக ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்றால், கோர்ட்டுக்குப் போய்தான் முடிவு எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதில் சம்பந்தப் பட்ட எ.ஈ. இதில் கிராம மின்சார விஸ்தரிப்பு என்று கிடையாது, தனிப்பட்டவருக்கு கொடுத்திருக்கும் கனெக்ஷன். ஆகவே, தொடர்ந்து உப கேள்விகள் போட்டு எடுக்கக்கூடிய முடிவு எந்த ரூபத்தில் அமைய வேண்டும் என்பது குறித்து அரசாங்கத்தை கட்டுப்படுத்த வேண்டாம்.